**A**

# மூன்றாம் பருவத்தேர்வு – 2024

**வகுப்பு : 6** **தொகுத்தறி மதிப்பீடு – சமூக அறிவியல்**

**காலம் : 2 மணி** **மதிப்பெண்கள் : 60**

**I. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக.** **4 x 1 = 4**

1. குறிஞ்சி நிலப்பகுதியில் வாழ்ந்த மக்களின் தொழில் யாது?
   அ) கொள்ளையடித்தல் ஆ) ஆநிரை மேய்த்தல்
   இ) வேட்டையாடுதல் மற்றும் சேகரித்தல் ஈ) வேளாண்மை

2 கீழ்க்காண்பனவற்றுள் இரண்டாம் புலிகேசியின் வெற்றிகளை விவரிக்கும் கல்வெட்டு எது?
   அ) அய்ஹோல் ஆ) சாரநாத்
   இ) சாஞ்சி ஈ) ஜூனாகத்

3. இந்தியா ____________ உற்பத்தியில் முன்னணி வகிக்கின்றது.
   அ) துத்தநாகம் ஆ) மைக்கா
   இ) மாங்கனீசு ஈ) நிலக்கரி

4. உலக மக்களாட்சி தினம் ___________.
   அ) செப்டம்பர் 15 ஆ) அக்டோபர் 15
   இ) நவம்பர் 15 ஈ) டிசம்பர் 15

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** **4 x 1 = 4**

5. உலகின் நேர மண்டலங்களின் எண்ணிக்கை ___________.

6. ஹாலா எழுதிய நூலின் பெயர் ___________.

7. ___________ படையெடுப்பு குப்தர்களின் வீழ்ச்சிக்கு வழிகோலியது.

8. தமிழ்நாட்டில் முதன்முதலாக உருவாக்கப்பட்ட நகராட்சி ___________ ஆகும்.

**III. பொருத்துக.** **4 x 1 = 4**

9. நாளந்தா பல்கலைக்கழகம் – (i) பன்னாட்டு தேதி கோடு

10. 180° தீர்க்கக்கோடு – (ii) மாநில தேர்தல் ஆணையம்

11. உள்ளாட்சித் தேர்தல் – (iii) இரண்டாம் சமஸ்கிருத இலக்கணஆசிரியர்

12. அக்னி மித்ரா – (iv) 10,000 மாணவர்கள்

**IV. சரியா / தவறா?** **4 x 1 = 4**

13. கடற்கரைப் பகுதிகள் மருதம் என அழைக்கப்பட்டன.

14. புவியின் வடிவம் ஜியாய்டு என அழைக்கப்படுகிறது.

15. மாமல்லபுரம் யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியச் சின்னங்களில் ஒன்றாகும்.

16. தமிழகத்தில் தற்போது 24 மாநகராட்சிகள் உள்ளன.

**V. ஓரிரு வார்த்தையில் விடையளி:–** **3 x 1 = 3**

17. அட்சக்கோட்டின் அடிப்படையில் இந்தியா எந்த அரைக்கோளத்தில் அமைந்துள்ளது?

18. ஐரோப்பாவின் மிக நீளமான ஆறு எது?

19 கவிராஜா என்ற பட்டம் யாருக்கு வழங்கப்பட்டது?

www.Padasalai.Net

**VI. எவையேனும் 8 வினாக்களுக்கு குறுகிய விடையளிக்கவும்:–** **8 x 2 = 16**

20. களப்பிரர் காலத்தைச் சேர்ந்த ஏதேனும் மூன்று தமிழ் இலக்கியங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

21. சாதவாகனர்களின் நினைவுச் சின்னங்கள் அமைந்துள்ள இடங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

22. ஹர்ஷர் காலத்தில் வசூலிக்கப்பட்ட மூன்று வரிகளைக் குறிப்பிடுக.

23. பல்லவர்களின் கட்டடக் கலையை நாம் எவ்வாறு வகைப்படுத்தலாம்?

24. வேறுபாடுகளின் நிலம் ஆசியா – நிரூபி.

25. புவியில் காணப்படும் நான்கு அரைக்கோளங்களின் பெயர்களைக் கூறுக.

26. இடி, மின்னல் – குறிப்பு வரைக.

27. தலநேரம் எனப்படுவது யாது?

28. பிரதிநிதித்துவ மக்களாட்சி – வரையறு.

29. இந்தியாவின் மிகப் பழமையான உள்ளாட்சி அமைப்பு எது?

30. கிராமசபைக் கூட்டம் நடைபெறும் நாட்கள் யாவை? அந்நாட்களின் சிறப்புகள் யாவை?

31. சாலைக் குறியீடுகள் பயன்படுத்தப்படும் நோக்கங்கள் யாவை?

**VII. எவையேனும் 4 வினாக்களுக்கு விரிவான விடையளிக்கவும்:–** **4 x 5 = 20**

32. களப்பிரர்களின் காலம் இருண்ட காலம் அல்ல – காரணங்கள் தருக.

33. எலிபெண்டா தீவு, எல்லோராவிலுள்ள கைலாசநாதர் கோயில் ஆகியவை பற்றி குறிப்பு வரைக.

34. வெப்பப் பாலைவனம் மற்றும் குளிர்பாலைவனம் – வேறுபடுத்துக.

35. புவி மாதிரியின் பயன்கள் யாவை?

36. சாலை பாதுகாப்பு குறித்த ஐந்து முழக்கங்களை எழுதவும்.

37. கிராம ஊராட்சியின் வருவாய்களைப் பட்டியலிடுக.

**VIII. 38. அ) இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களை குறிக்கவும்.** **5 x 1 = 5**

1. மதுரா 2. உஜ்ஜயினி 3. கயா 4. கனோஜ் 5. சாஞ்சி

**(அல்லது)**

**ஆ) உலக வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.**

1. ஆப்பிரிக்கா 2. அட்லாண்டிக் பெருங்கடல் 3. ஆஸ்திரேலியா 4. வட அமெரிக்கா

5. தென் பெருங்கடல்

www.Padasalai.Net




Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com




www.Padasalai.Net